



புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் எம்.டி.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் மறைவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வனத்துறை அமைச்சர், கழக துணைப் பொது செயலாளர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தி அவரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா எம்.எல்.ஏ., முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி, புதுச்சேரி மாநில அவைத் தலைவர் எஸ்.பி.சிவக்குமார், காங்கிரஸ் புதுச்சேரி மாநிலத் தலைவர் வைத்தியலிங்கம் எம்.பி, புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர்கள் நாஜிம், அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், நாக தியாகராஜன், வைத்தியநாதன் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி கிழக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு 27 வது வார்டில் 70 அடி உயரம் கொண்ட கழக கொடி கம்பம் மற்றும் கல்வெட்டு திறப்பு விழா நடைபெற்றது இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு மற்றும் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதிச் செயலாளர் பேபிசேகர், ஆவடி மண்டல குழு தலைவர் அமுதா பேபி சேகர், ஆவடி மாநகர கிழக்கு பொருளாளர் யு. வெங்கடேசன், வார்டு செயலாளர் கோபால், உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! அ.ஆனந்த் தலைமையில் மனிதநேய உதய நாள்!

# அன்னை தயாளு அம்மாள் பயிற்சி பள்ளியில் தையல் இயந்திரம்! மாணவர்களுக்கு மடிக்கணினி!

### அமைச்சர்கள் ஆர்.இராஜேந்திரன் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினர்!

சென்னை, டிச.11-

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர்அணி சார்பில், மனித நேய உதயநாளை முன்னிட்டு மாவட்டசெயலாளர்அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், அ.ஆனந்த் தலைமையில், அன்னை தயாளு அம்மாள் பயிற்சிபள்ளியில்தையற்பயிற்சி முடித்தவர்களுக்குதையல்இயந்திரம் மற்றும் சான்றிதழ்களை சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். இராஜேந்திரன், Tally பயிற்சி முடித்த மாணவர்களுக்கு மடிக்கணினி மற்றும் சான்றிதழ்களை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் வழங்கினார்கள்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.இளைஞர்அணிசார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்18,மடிக்கணினி தையல் இயந்திரம் வழங்குவோம்! வருங்கால தலைமையினை வாழ்த்துவோம்! எனும் தலைப்பில்அன்னைதயாளுஅம்மாள் பயிற்சி பள்ளியில் தையற் பயிற்சி முடித்தவர்களுக்கு தையல் இயந்திரம் மற்றும்Tally பயிற்சி முடித்த மாணர்வகளுக்குமடிக்கணினிமற்றும்சான்றிதழ்கள்வழங்கும்விழாநேற்று (10.12.2024 செவ்வாய்கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை,பாரிமுனை,இராஜா அண்ணாமலை மன்றத்தில்நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.ஆனந்த் தலைமை வகித்தார்.

சென்னைகிழக்குமாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை(ம)சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம். தேவன், ப.ஸ்ரீராமுலு, இசட். ஆசாத் எம்.சி, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பா.ஜெகதீஷ், எம். இப்ராஹிம்கனி, இரா.கலைச் செல்வி, பி.விஜயகுமார், எம். வினாயகம், பா.பிரதீப்குமார், எல்.சத்பத்குமார் முன்னிலை வகிக்க,

எம்.எஸ்.அசாரூதீன், .எல். யஷ்வந்த், அ.திருப்பதி, நா. மோகன், எம்.சண்முகசுந்தரம், K.சூர்யபிரகாஷ், அ.சுமன்ராஜ், பி.செந்தில்குமார், க.பாலாஜி, எஸ்.இம்ரான்கான்,டி.பிலிப்ஸ், பி.விஷ்ணுசக்கரவர்த்தி. துறைமுகம்மேற்குகிழக்குபகுதி கழகசெயலாளர்கள்:மே.ஜனார்தனன்,கே.ஆர்.அபரஞ்சி,ம.முத்துகுமார்,ம.ந.சுந்தரம்,எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி. சந்தானலட்சுசி, சி.ப.ஜெயராமன். துறைமுகம் மேற்கு/கிழக்குவட்டகழகசெயலாளர்கள்: மா.ஜெய்சங்கர், பா.கதிரவன்,ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி,ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன்(எ) ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா.பார்த்திபன், க. கவியரசு ஆகியோர் வரவேற்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் அன்னை தயாளு அம்மாள் பயிற்சிபள்ளியில்தையற்பயிற்சி முடித்தவர்களுக்கு176 பெண்களுக்குதையல்இயந்திரம்மற்றும் சான்றிதழ்களை ற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் Tallyபயிற்சிமுடித்த84மாணவர்களுக்கு மடிக்கணினி மற்றும் சான்றிதழ்களைபள்ளிக்கல்வித் துறைஅமைச்சர்அன்பில்மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர்.

மேலும்,இந்நலத்திட்டவிழாவில், சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, இரா.நரேந்திரன், பி.கே.மூரத்தி எம்.சி, வி.சுதாகர், சுதாதீனதயானன் எம்.சி, ராஜேஷ்வரி ஸ்ரீதர் எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, துறைமுகம் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்:ராஜேஷ்ஜெயின்எம்.சி, வெ.பரிமளம் எம்.சி, எல்.நவின் எம்.சி.ஆகியோர்சிறப்பித்தனர்.

வட்ட கழக செயலாளர்கள் D.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன் நன்றி கூறினார்கள்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 5–வது நிகழ்ச்சியாக 80 அணிகள் பங்கேற்ற இருவர் இறகுப்பந்தாட்டப்போட்டி நடைபெற்றது. இறகுபந்து போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. முதல் பரிசு வழங்கினார். பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் தலைமை ஏற்றார். 4 வது வட்ட கழக செயலாளர் கே.பவுல் முன்னிலை வகித்தார். 5வது வட்ட செயல்வீரர் வழக்கறிஞர் மு.பாபு சிறந்த முறையில் ஏற்பாடு செய்தார். இரட்டையர் இறகு இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற வீர்களுக்கு முதல் பரிசாக வெற்றிக்கோப்பையும் ரூ.15 ஆயிரம் ரொக்கப்பரிசும் வழங்கப்பட்டது. 2 வது பரிசாக கோப்பை மற்றும் ரூ.10 ஆயிரம் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது. 3 ஆம் இடம் வென்ற இரு அணிகளுக்கு கோப்பை மற்றும் தலா ரூ. 5 ஆயிரம் ரொக்கப்பரிசும் வழங்கப்பட்டது.

### தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினரின்

# பொருளாதார முன்னேற்றத்திற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

### மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, டிச. 11-

“ஒன்றிய அரசின் ‘தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதி நிறுவனம்’ (the National Minority Development Finance Corporation NMDFC) தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? என்றும், தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறுபான்மை யினருக்கு பயனுள்ள வகையில் நலத்திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் பயனாளிகள் விபரங்கள் பற்றியும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.



அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய சிறுபான்மை யினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ அவர்கள் “தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO) என்பது தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் ‘தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதி நிறுவனத்தின் (NMDFC) மாநில முகவாண்மை. இந்த முகவாண்மை தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தொழிற் கடன், கல்விக் கடன் மற்றும் நுண்கடன் திட்டங்களை செயல்படுத்துகிறது.

அதாவது பெட்டிக்கடை, பல்பொருள் அங்காடி, புத்தகக் கடை, கைவினைப்பொருட்கள், தையல் தொழில், ஜவுளி வணிகம், அழகு நிலையம், விவசாயம், கோழிப்பண்ணை போன்ற சிறு வணிகங்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் மேற்கண்ட தொழில்களுக்கு வழங்கப்பட்ட கடன் மொத்தம் 220.20 கோடி ரூபாய். இதன்மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பயன்பெற்ற பயனாளர்கள் எண்ணிக்கை மட்டும் 39,069. மேலும், கனரா வங்கி மூலம் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதி நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 377 பயனாளர்களுக்கு மொத்தம் 3.51 கோடி ரூபாய் கடனாக வழங்கியுள்ளது.

மேலும், தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறுபான்மையினருக்கு பயனுள்ள வகையில் நலத்திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்ய தமிழ்நாடு சிறுபான்மை யினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கடன் திட்டங்களை செயல்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தமிழகத்தின் 38 மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட நிர்வாக அலுவலர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் ஒரு மாதத்தில் 5 முதல் 6 கடன் முகாம்களை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில், சிறுபான்மையின ருக்கான கடன் திட்டங்களின் விவரங்கள் மற்றும் பலன்கள் குறித்து விளக்கப்பட்டு, அவர்கள் சுயதொழில் செய்ய ஊக்குவிக்கும் வகையில் முகாம்கள் நடத்தப்படுகின்றன.

நிதியாண்டின் தொடக்கத்தில் கடன் திட்டங்கள் குறித்து பிரபல செய்தித்தாள்களில் செய்திக்குறிப்பு வெளியிடப்படுகிறது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கல்விக் கடனுக்கான துண்டுப் பிர சுரங்கள் மற்றும் கடன் திட்டங்களின் விவரங்கள் பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் விநியோகிக்கப்படுகின்றன” என்று தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம். 4,54 வது வார்டு வெற்றி நகர் கன்னியம்மன் கோவிலின் குளத்தை சுத்தப்படுத்தி அக்குளத்தை சுற்றி நீண்ட காலமாக தேக்கத்தில் உள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு 4 வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் து காமராஜ் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். உடன் முன்னாள் மாவட்ட கழக பிரதிநிதி எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், மாநகராட்சி பொறியாளர் தங்கதுரை, வட்ட நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஆர்.எஸ். ராஜாக்கனி

### டிசம்பர் 11 (2009)



முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து விருதுநகர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

விருதுநகர் கூட்டுறவு வங்கித் தலைவராகப் பணியாற்றியவர்.

1986ல் மொழிப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ இருபத்தோரு முறை சிறை சென்றவர்.

“சிறைக்கும், சித்திரவதைக்கும் அஞ்சாத என் தம்பி ராஜாக்கனி” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### வெள்ளக்கோயில் - செம்மாண்டாம் பாளையத்தில்

# சாலை விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச. 11-

திருப்பூர் மாவட்டம், காங்கயம், வெள்ளகோயில் - செம்மாண்டாம்பாளையம் சாலையில் நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு - ஆறுதல்மற்றும்நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு: -

திருப்பூர் மாவட்டம், காங்கயம்வட்டம், வெள்ளகோவில் - செம்மாண்டாம் பாளையம் சாலை, பெரியசாமி நகர் அருகில் இன்று (10.12.2024)காலைவெள்ளகோவில், அகலரப்பாளையம்புதூர்அரசுஆரம்பப்பள்ளியில் உதவி தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த திருமதி.சரஸ்வதி (வயது 50) க/பெ.கணபதி, அதே பள்ளியில் பயிலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அகலரப்பாளையம்புதூரைச் சேர்ந்த மாணவிகள் செல்வி. ராகவி (வயது 10) த/பெ.கார்த்தி மற்றும் செல்வி.யாழினி(வயது8)த/பெ.கார்த்தி ஆகிய இருவருடன்இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருந்த போது தனக்கு முன்னால் சென்ற டிராக்டரை முந்திச் செல்ல முயன்றபோது எதிர்பாராதவிதமாகடிராக்டரின் டிரைலர்மீது மோதியவிபத்தில் திருமதி.சரஸ்வதி மற்றும் செல்வி.ராகவி ஆகிய இருவரும் பலத்த காயமடைந்துசிகிச்சைக்காகமருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர்என்றதுயரகரமான செய்தியை அறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்சிகிச்சை பெற்றுவரும் செல்வி. யாழினி என்பவருக்கு சிறப்புச்சிகிச்சை அளிக்கவும் உத்தவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு,உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டுஇலட்சம்ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்குஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறுமுதல்வர்அவர்கள் அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காவனூர் மா.தாமோதரன்

### டிசம்பர் 11 (2015)



பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கிளைச் செயலாளர், சித்தாமூர் ஒன்றியச் செயலாளர், மாவட்ட அணிகளின் அமைப்பாளராகப் பணியாற்றியவர்.

சூணாம்பேடு ஊராட்சி மன்றத் தலைவராக இரண்டு முறையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு, சட்ட நகல் எரிப்பு, விலைவாசி உயர்வு, இலங்கைத் தமிழர் ஆதரவு உள்ளிட்ட பல போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ பத்து முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.